செய்தி வெளியீடு எண் : 96 நாள் : 11.01.2025

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள் இன்று (11.1.2025) சென்னை, பெரியார் ஈ. வெ. ரா. நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், ஏகாம்பரநாதர் கோயில் திடலில் கலை பண்பாட்டுத் துறை வழங்கும் 'சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா' தொடக்க விழா நடைபெறும் இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

**பின்பு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முதன் முதலில் 'சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா' நிகழ்ச்சியை சென்னையில் தொடங்கி வைத்தார்கள். கழக அரசு பொறுப்பேற்கின்ற போதெல்லாம் இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்படுவது அனைவரும் அறிவீர்கள். அந்த வகையில், இந்த ஆண்டுக்கான நிகழ்ச்சி சென்னை மாநகரப் பகுதிகளில் 18 இடங்களில் நடைபெற இருக்கின்றன. 13–ஆம் தேதி இந்த நிகழ்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாலை சுமார் 6 மணி அளவில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில், கீழ்பாக்கத்தில் உள்ள ஏகாம்பரநாதர் திருக்கோவில் சார்ந்த இடத்தில் நிகழ்ச்சியை தொடங்கி வைக்க இருக்கிறார்கள். மேலும் சென்னை பகுதியில் 17 இடங்களில் 14 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதி வரை நான்கு நாட்கள் நிகழ்ச்சி நடைபெறும். சுமார் 1300–க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நம்முடைய தமிழ்நாட்டைச் சார்ந்த கலைஞர்கள் மட்டுமல்ல கேரளா, வட மாநிலங்களான மேற்குவங்கம், கோவா, உத்திரகாண்ட், மகாராஷ்டிரா போன்ற மாநிலத்தைச் சார்ந்த கலைஞர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கின்றார்கள்.

கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் நான்கு நாட்களும் நிகழ்ச்சியை பார்த்து பரவசம் அடைந்தார்கள். இந்த ஆண்டும் நிச்சயமாக சிறப்பாக நடைபெற இருக்கின்றது. 17–ஆம் தேதி முடிந்த பிறகு திட்டமிட்டு நாட்கள் அறிவித்து மதுரை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம், வேலூர், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் நிகழ்ச்சி நடைபெற இருக்கின்றது.

எனவே, நம்முடைய கலையை போற்றும் வகையில், கலைக்கு மீண்டும் ஒரு சிறப்புக்குரிய நிகழ்வை உருவாக்கும் வகையில், புத்துயிரூட்டும் வகையில், இந்நிகழ்ச்சி ஆண்டுதோறும் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களிடத்தில், ஏன் உலகளவில், You–Tube Channel முதற்கொண்டு தொலைக்காட்சி, ஊடகங்கள் மூலமாக பத்திரிகைகளின் மூலமாக செய்தி அறிகின்றபோது நம்முடைய கலையின் தன்மையை அறியக்கூடிய வகையில் நிச்சயமாக சிறப்பாக அமையும்.

இதனால் குறிப்பாக நாட்டுப்புறக் கலைஞர்களுக்கெல்லாம் இது ஒரு மறுவாழ்வை ஏற்படுத்தும் சூழலையும், கலைக்கு ஒரு புது வாழ்வு கிடைக்கும் சூழலையும் தொடர்ந்து தமிழ்நாடு அரசு செய்து வருகிறது. அந்த வகையில், சென்னை சங்கமம் நம்ம ஊர் திருவிழா என்ற நிகழ்ச்சி சிறப்பாக தொடர்ந்து ஆண்டுதோறும் கழக அரசால் நடத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டும் சிறப்பாக நடத்த வேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறார். அந்த அடிப்படையில் நடைபெறுகிறது. 13–ஆம் தேதி மாலை 6 மணி அளவில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில், கீழ்பாக்கத்தில் உள்ள ஏகாம்பர சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை சங்கமம் நம்ம ஊர் திருவிழாவை தொடங்கி வைக்க இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் ஆங்காங்கு நாற்காலிகள் போடப்பட்டு, 18 இடங்களிலும் முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள், மாநகராட்சியைச் சார்ந்த பணியாளர்கள், காவல் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகியத் துறை அலுவலர்கள் உடனிருந்து, வரக்கூடிய பொதுமக்களுக்கு எந்தவித இன்னல்களும் ஏற்படாத வகையில் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கிறது.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஏற்கனவே, முடிந்த அளவு அரசின் சார்பில் நிதி நிலைமைக்கேற்ப உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. அவர்களுக்கான கருவிகள் வழங்குவது, உடைகள் வழங்குவது என வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து வரக்கூடிய காலங்களில் என்ன கோரிக்கை நாட்டுப்புறக் கலைஞர்கர்களிடத்திலிருந்து வருகின்றதோ அதை முடிந்த அளவு நிதி

நிலைமைகளுக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அதை செய்வதற்கு நிச்சயமாக உறுதுணையாக இருப்போம்.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேட்டியில் தெரிவித்தார்.

சென்னையில், தை மாதம் தொடக்கத்தில் பொங்கல் திருவிழாவின் போது 'சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழா' என்ற மாபெரும் கலைவிழா கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. இந்த ஆண்டின் கலை நிகழ்ச்சிகள் 13.1.2025 அன்று கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இந்த விழாவில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உள்ளன.

தொடக்க விழாவை அடுத்து, 'சென்னை சங்கமம்– நம்ம ஊரு திருவிழா' கலை நிகழ்ச்சிகள் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, ராஜா அண்ணாமலைபுரம், அரசு இசைக்கல்லூரி வளாகம், திருவல்லிக்கேணி பாரத சாரண சாரணியர் திடல், கிண்டி கத்திபாரா சந்திப்பு, ஜாபர்கான்பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், தியாகராயநகர் நடேசன் பூங்கா, நுங்கம்பாக்கம் மாநகராட்சி விளையாட்டுத் திடல், எழும்பூர் அரசு அருங்காட்சியகம், கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ,வெ,ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்திடல், ராயபுரம் ராபின்சன் பூங்கா, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய் நகர் பூங்கா, கே.கே.நகர் சிவன் பூங்கா, வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டு மைதானம், அம்பத்தூர் எஸ்.வி. விளையாட்டுத் திடல் ஆகிய 18 இடங்களில் 14.1.2025 முதல் 17.1.2025 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற உள்ளன.

'சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழாவில்' தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள 1500 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன்

கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட நாட்டுப்புற வடிவங்களை நிகழ்த்தி பார்வையாளர்களை பரவசப்படுத்துவார்கள். இத்துடன் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலைஞர்களும் கலை நிகழ்ச்சிகள் வழங்க உள்ளனர். இவற்றுடன் கேரளாவின் தைய்யம் நடனம், மகாராஷ்டிராவின் லாவணி நடனம், ராஜஸ்தான் கூமர் நடனம், மேற்கு வங்காளம் தனுச்சி நடனம், கோவாவின் விளக்கு நடனம், உத்ராகண்ட்டின் சபேலி நடனம் ஆகிய அயல் மாநில கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

சென்னை சங்கமம்– நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியைத் தொடர்ந்து கோயமுத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய எட்டு நகரங்களிலும் இந்த ஆண்டு சங்கமம்– நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

விழா நடைபெறும் இடங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பி உண்ணும் பல உணவு வகைகளைக் கொண்ட அரங்குகள் அமைத்து உணவுத்திருவிழாவும் நடத்தப்பட உள்ளது. பூம்புகார் நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்பட உள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழும் வாய்ப்புகளும் பார்வையாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் நமது நாட்டுப்புறக் கலை வடிவங்களைப் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் பிற நகரங்களில் வாழும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையிலும் சங்கமம் நம்ம ஊரு திருவிழாக்கள் தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் நடத்தப்பட உள்ளன. இந்த நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக்கான நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பயன்பெறவும், தமிழ் மண்ணின் வளமான கலை வடிவங்கள் உயிர்போடு திகழவும் உதவுகின்றன.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu